மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெருநகர் வளர்ச்சித் திட்டம் உலக வங்கி உதவியுடன் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற நகரங்கள் அதில் எடுக்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் அந்தத் திட்டம் நடைபெற இருக்கின்றது. விருதுநகரைப் பொறுத்த வரையில் முதலில் தேர்வு செய்யப்பட்ட 74 நகரங்களில் விருதுநகரும் அடங்கும்.

இது மதுரை மண்டலத்திலுள்ள பிரிவில் அடங்கியிருப்பதால், மதுரை மண்டலத்திலுள்ள அந்தப் பணிகளை முறைப்படுத்த கிர்லோஸ்கர் கம்பெனி என்ற ஒரு நிறுவனம் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. அந்தக் கம்பெனி மூலமாக அந்த உள்ளாட்சி மன்றங்கள்—ரீபேயிங் கெப்பாசிட்டி—அவர்கள் பணம் திருப்பக்கூடிய நிலைமை இருக்கின்றதா என்பதையும் ஆய்வு செய்து, அந்தப் பணிகளை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்ற குறிப்பும் ஆய்வில் உள்ளது.

நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்தப் பணியை மீண்டும் துரிதப்படுத்த அந்த கிர்லோஸ்கர் கம்பெனிக்கு நாங்கள் தாக்கீது அனுப்பியுள்ளோம். இந்தத் திட்டத்தை உள்ளாட்சி மன்றத் துறையின் மூலமாகவும் இணைந்து விரைவில் முடிக்க இந்த அரசு ஆவன செய்யும்.

(உ) எதிர்க் கட்சித் தலைவர் மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள்மீது காவல்துறையால் ஒரு வழக்கு தவறான முறையிலே போடப்பட்ட பொழுது, அதை நாங்கள் சுட்டிக் காட்டியபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அது அவர்களுடைய தகவலுக்கே தெரியாது, அப்படி அவர் மீது வழக்கு இருந்தால் அந்த வழக்கு திரும்பப் பெறப்படுகிறது, வாபஸ் செய்யப்படுகிறது என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதற்குப் பின்னால் அதையொட்டி போலீஸ் கமிஷனர் **அவர்கள் சில நாட்களுக்குப் பின்னால் பேட்டி கொடுத்த பொழுது, எனக்கு எழுத்துப்பூர்வமாக, அதிகாரப்பூர்வமாக அதுபோல உத்தரவு ஏதும் இல்லை, எனவே வழக்கு இருக்கிறது என்பதைப்போல கமிஷனர் ** எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அந்தப் பிரச்சினையை நான் மீண்டும் சட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மன்றத்தில் எழுப்பி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதற்கு முன்னாலே உத்தரவு போட்டிருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, சட்டமன்றத்திலே அறிவித்தவுடனேயே அது உத்தரவாகிறது; எனவே, முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே உத்தரவு போட்டதற்குப் பின்னால் கமிஷனர் ** எழுத்து மூலமாக எனக்கு அது வரவில்லை என்று சொல்வது நியாயம் அல்ல. முதலமைச்சர்—உள்துறை அமைச்சராகவும் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உத்தரவு போட்டதற்குப் பின்னால் கமிஷனர் ** அதை மீற முடியாது. முதலமைச்சரவர்களைவிட கமிஷனர் ** உயர்ந்தவர் அல்ல; பெரியவர் அல்ல. எனவே, அது நிச்சயமாகச் சட்டமன்றத்திலே அறிவித்ததற்குப் பின்னால் முதலமைச்சரவர்கள் அறிவித்ததற்குப் பின்னால், கமிஷனர் ** உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்று நான் சொன்னேன். உடனே மாண்புமிகு முதலமைச்சரவர்களும் ஒத்துக்கொண்டு, சிலபேர் இப்படித்தான், டெக்னிக்கலாக இருக்கிறார்கள்—சரி பெயரை எடுத்து விடுங்கள், பெயர் வேண்டாம் என்கிறார்கள். சட்ட அமைச்சரவர்கள்—கமிஷனர், போலீஸ் துறை ஆணையாளர், இப்படித்தான் சிலபேர் டெக்னிக்கலாக இருக்கிறார்கள், இதிலே என்ன டெக்னிக்கல் பாயின்ட்ஸ் இருக்கின்றன, எனவே ‘‘ நான் அறிவித்து விட்டேன் ; அவர் அதை நிறைவேற்றியிருக்க வேண்டும்; இருந்தாலும் நான் இதுகுறித்து கமிஷனரிடத்திலே விளக்கம் கேட்பேன்’’ என்றுகூட முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்னாலேயும், நாங்கள் எங்களுடைய வழக்கறிஞர் மூலமாக, எதிர்க்கட்சித் தலைவருடைய வழக்கறிஞர் மூலமாகக் கேள்விப்படுவது இன்னமும் அந்த வழக்கு வாபஸ் பெறப்படவில்லை, எதிர்க்கட்சித் தலைவர் மேல் உள்ள வழக்கு அப்படியே இருக்கிறது; சட்டமன்றம் முடிந்த உடனே 11 ஆம் தேதிக்கு மேலே சார்ஜ் சீட் போடப் போவதாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே, இது, முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்ததற்குப் பின்னாலேயும், இந்த வழக்கு, அதுவும் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிச் சொன்னதற்குப் பின்னாலேயும், இந்த வழக்கு தொடர்ந்து இருக்குமேயானால், அது மிக மிகத் தவறானதாகும்.

கமிஷனர் ** அவருக்கு எந்த அதிகாரமும் அதை மீறி நடப்பதற்கு, நிச்சயமாக கிடையாது; எனவே, அதை மாண்புமிகு முதலமைச்சரவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

1989 மே 6] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

களிடத்திலேயிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நீங்கள் அறிவித்தபடி அந்த உத்தரவு இட்டிருக்கிறீர்களா? அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டு விட்டதா? அதனுடைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் நாள்தோறும் நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள், எதிர்க்கட்சித் தலைவருக்காகவும் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதைப்போலவே, காங்கிரஸ் கட்சியிலேயும், துணைத் தலைவர்தான் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

எனக்குக்கூட ஒரு யோசனை, நானும் ஒரு துணை முதலமைச்சரை நியமித்துவிட்டு, இந்த அவையிலே துணை முதலமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் என்கின்ற அளவிலே இந்த அவை நடந்தால் அதுவும் ஒரு அழகாகத்தான் இருக்கும் என்று நான் கூட எண்ணுகின்றேன்.

இருந்தபோதிலும், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, அது ஒரு தவறான வழக்கு என்று சொன்னார்கள். வழக்கு தவறானதோ, இல்லையோ, அதைப்பற்றி நான் அப்பொழுதே கவலைப்படவில்லை. சரியான வழக்காக இருந்தாலும் கூட, நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டதைப்போல, தொடர்ந்து குறிப்பிட்டு வருவதைப்போல, யார் மீதும் பழி வாங்குகின்ற அளவிற்கு ஒரு சாடிஸ்ட் மனப்பான்மையோடு இந்த அரசு நடந்து கொள்ளாது என்ற உறுதியை மீண்டும் இங்கே அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அந்த அடிப்படையில் போலீஸ் கமிஷனர் அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த மாட்டார், மேற்கொள்ள மாட்டார் என்ற உறுதியை மீண்டும் நான் இங்கே அறிவிக்கின்றேன். எனவே, இதை ஒரு பிரச்சினையாக நான் கருதவில்லை.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, போலீஸ் கமிஷனர் டெக்னிக்கலாக சொல்கிறார் என்று கூறிவிட்டு முதலமைச்சர் அவர்கள் டெக்னிக்கலாக பதில் சொல்கிறார்கள். வழக்கு தொடர மாட்டோம் என்று சொல்வது ஒன்று. அதாவது வழக்கு இருக்கும். அதுபற்றி தொடர மாட்டோம். நான்

கேட்பது அவர் மீது இருக்கிற வழக்கை வாபஸ் பெறவேண்டும். நான் சொல்வது அவர் ஊரில் இல்லை, அப்படி இருக்கிற போது தேர்தலுக்கு எல்லாம் வரவில்லை, அவரை யாரோ கூட வந்தார், போனார் என்று 307 செக்ஷன் எல்லாம் அவர் மீது போடப்பட்டிருக்கிறது. எனவே, அது தவறான ஒரு வழக்கு. அதுபோன்ற சம்பவம் எதுவும் நடக்கவில்லை. அவர் மீது இருக்கிற வழக்கை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று தான் நான் கேட்டேன். வழக்கு இருக்கும். அதை விசாரிக்க மாட்டோம் என்று சொல்வது, எப்போது வேண்டுமானால் பின்னாலே பயன்படுத்திக்கொள்ளலாம். நான் கேட்பது அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பது. முதலமைச்சர் அவர்கள் அப்படித்தான் அறிவித்தார்கள். வாபஸ் பெறப்படும் என்று அறிவித்தார்கள். கமிஷனர் அவர்கள் ஏதோ டெனிக்கலாக, எழுத்து மூலமாக, வரவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அதை ஏற்று, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை ஏற்று கமிஷனர் அவர்களை உத்திரவிடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னபோதே மேலும் விவரங்களை அறிந்து நாளைக்கு பதில் சொல்கிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் அவர்கள் இன்றைக்கே பதில் சொல்ல விரும்பி இந்தப் பிரச்சினையை எழுப்பி விட்டார்கள். நான் மேலும் போலீஸ் துறையினிடத்தில் விவரங்களை நிச்சயமாக அறிவேன். ஆனால் நான் மீண்டும் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் மீது இது தொடர்பான வழக்கு நிச்சயமாக இருக்காது.

(ஊ) பொதுக் கணக்குக் குழுத் தலைவர் நியமனம் பற்றி சில பத்திரிகைகளில் விமர்சித்திருப்பது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1989-90-ம் ஆண்டிற்கான இந்த சட்ட மன்றத்தில் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நான் தங்களால் நியமனம் செய்யப்பட்டேன். கடந்த ஒரு வாரமாக தமிழகத்தின் பல்வேறு வார, மாதாந்திர பத்திரிக்கைகளில் இந்த நியமனத்தை கொச்சைப்படுத்தி, ஏதோ இந்த நியமனத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்து, அதன் மூலமாக காங்கிரஸ் கட்சியை கையில் எடுத்துக் கொண்டதாகவும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நியாயமாக கிடைக்கவேண்டிய பதவியை மரபுகளை மீறி காங்கிரஸ் கட்சிக்குத்தந்து விட்டதாகவும், அதனால் சரியாக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தில் செயல்படவில்லை